# தெவிநுவர பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 07 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 19 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தெவிநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அலுவலக் கட்டிடத்திற்கு புதிதாக பகுதியொன்று இணைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 156,313 இற்கான செலவினை மூலதனப்படுத்தி யிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 259,830 பெறுமதியான 05 நிலையான சொத்துக்கள் அலகுகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு செய்திருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான தெவிநுவர இலங்கை வங்கி கட்டிடம் அமைந்துள்ள ரூபா 9,000,000 பெறுமதியான 22.34 பர்சஸ் காணிப் பகுதியின் பெறுமதி காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 33 பர்சஸ் கொண்ட 03 காணிகளின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான ஊழியர் பிணை முதலீட்டு பெறுமதியும் ஊழியர் வைப்புக்கின் பெறுமதியும் சமமாக இருக்க வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஊழியர் பிணை முதலீடுகளின் பெறுமதி ரூபா 14,000 காணப்பட்டதுடன் திருப்பிச் செலுத்த வேண்டிய ஊழியர் வைப்புக்களின் பெறுமதி ரூபா 20,700 ஆக காணப்பட்டமையினால் ரூபா 6,700 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) நாட்குறிப்பு 49 இன் பிரகாரம் வருமானம் திருப்பிச் செலுத்தல் பகுப்பாய்வு மேற்கொண்டபோது நாட்குறிப்புகளின் பிரகாரம் ஏனைய உதவிகள் ரூபா 2,000 இனாலும் வாடகை வருமானம் ரூபா 20,500 இனாலும் மற்றும் சேவைக்கட்டணம் ரூபா 54,140 இனாலும் குறிப்பிட்ட கணக்குகள் வரவு வைக்கப்பட்டிருந்த போதும் பேரேட்டு கணக்குகளின் பிரகாரம் அவ்வாறான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) ஆகரவல முதல் உட அபரக்க ஹெட்டிஆரச்சி பாதை வரை பாதைக்கு தார் போடுவதற்காக செலுத்த வேண்டிய தொகை நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 319,708 ஆகக் காணப்பட்டதுடன் குறிப்பிட்ட வேலைக்காக கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 511,937 எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 192,229 தொகை ஒன்று குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) சபையினால் பெக்கோ இயந்திர வாடகைக்கு கொடுப்பதன் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 197,070 தொகை கிடைக்க வேண்டிய வாடகையின் கீழ் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

06 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அவற்றின் பெறுமதி ரூபா 56,500,725 ஆகக் காணப்பட்டதுடன் துணைப் பதிவேட்டின் பிரகாரம் மற்றும் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவற்றின் பெறுமதி ரூபா 56,492,512 ஆக காணப்பட்டமையால் ரூபா 8,213 வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 635,082 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்திருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 45,529,839 ஆகும்.

(இ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பண மாற்றக் கணக்கில் காட்டப்பட்டுள்ள ரூபா 821,995 தொகை 2008 ஆண்டு முதல் தொடர்ந்து முன்கொண்டுவரப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன் அவை மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 100,620,483 பெறுமதியான 12 கணக்கு விடயங்கள் தொடர்பாக சான்றுக் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,261,579 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,702,562 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 1,820 | 1,848 | 2,748 |
| வாடகை | 16,698 | 16,520 | 7,473 |
| ஏனைய வருமானங்கள் | 35,140 | 36,015 | 42,406 |

2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 412,921 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 18,749,330 என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---------------------------------------------------

(அ) 2005 மார்ச் 31 திகதிய இலக்கம் 08/2005 கொண்ட பொது நிருவாக சுற்று நிருபத்தின் 11.5 பந்தியின் பிரகாரம் ஆதனக் கடனுக்காக வங்கி வட்டி வீதத்திற்கும் அலுவலர்களிடம் அறவிடப்படும் நூற்றிற்கு 4 வட்டி வீதம் இடையிலான வித்தியாசத்தை அரசினால் மீளளிப்புச் செய்யப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான ரூபா 949,047 இற்கான தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்த போதும் அத்தொகை 2013 திசெம்பர் 31 திகதி வரை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருடாந்த கணிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டு தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை.

(இ) 2013 ஆண்டிற்கான தென் மாகாண சபை மந்திரிமார்களின் ஒதுக்கீடுகளின் கீழ் பெத்தகம்மத்த கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான உபகரணங்கள் வழங்குவதற்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 25,000 தொகையில் 2014 அக்டோபர் மாதம் 17 திகதி வரையும் அவ் உபகரணங்கள் வழங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 மனித வள முகாமைத்துவம்

--------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 01 | 02 | - | 01 |
| இரண்டாம் தர | 26 | 25 | 01 | - |
| ஆரம்ப | 41 | 31 | 10 | - |
| (அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 28 | - | 28 |
| | 68 | 86 | 11 | 29 |

(i) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பதவியணி சம்பளம் அங்கத்தவர் படி ஆகியவற்றிற்காக ரூபா 14,274,900 தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது சம்பளம் மற்றும் அங்கத்தகவர் படியாக ரூபா 14,834,308 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தமையினால் சபை நிதியத்திற்கு ரூபா 559,408 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

(ii) திறைசேரி செயலாளரின் 2002 ஜனவரி 03 திகதிய முகாமைத்துவ சேவை சுற்று நிருப இலக்கம் 14 பிரகாரம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரின் 2006 ஏப்ரல் 10 திகதிய முகாமைத்துவச் சேவை சுற்று நிருப இலக்கம் 28 இன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்காலிக, அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது வேறேதும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபையினால் 2013 ஆண்டின்

போது 28 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு ரூபா 4,154,369 தொகையொன்று சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1995 நவம்பர் 14 ஆந் திகதி உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 95/15 கொண்ட சுற்று நிருபத்தின் பந்தி 3.3 இன் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக சபையின் மாதாந்த கூட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்காக 2013 ஆண்டின் போது ரூபா 10,000 தொகையொன்று செயலாளருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132 ஏ யின் பிரகாரம் பொது மக்கள் வரவேற்புகள் தொடர்பாக வேறு பொதுவான முக்கியத்துவமுடைய நிகழ்வு ஒன்றிற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,000 இற்கு மிகையான செலவு மேற்கொள்ளப்படுமிடத்து அதற்காக உரிய அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் அவ்வாறு பூர்வாங்க அங்கீகாரம் இன்றி பிரதேச சபையினால் 2013 ஆண்டின் போது ரூபா 45,677 இற்கான விழாச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

4. கணக்கு நடவடிக்கைத் தன்மைகள் மற்றும் நல்லாட்சி

---------------------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்கான சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுக் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றெென பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------

சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூடியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் சபையின் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கலஞ்சியக் கட்டுப்பாடு